## இலங்கை காப்புறுதிச் சபை - 2010

---

### 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய இலங்கை காப்புறுதிச் சபையானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் இலங்கை காப்புறுதிச் சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 மிகவும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்

எனது அபிப்பிராயம் முனைப்பழியற்றதாக்கப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இல. 7 கீழ் கவனம் செலுத்துகின்றேன். மீளாய்வாண்டிற்கான சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான நிதிசார் விளைவுகள் ரூபா.29,177,024 தொகையான பற்றாக்குறையானதுடன் இப்பாதகமான நிலைமையினை ஈடுசெய்வதற்காக காப்புறுதிப் பத்திர உடைமையாளர் பாதுகாப்பு நிதியத்திலிருந்து ரூபா. 30,472,838 தொகை இலாபத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கான தொடர்பு** | **இணங்காமை** |
|---|---|
| (அ) 2006 சனவரி 25 ஆந் திகதிய தேசிய கொள்வனவு முகவராண்மையால் வழங்கப் பட்ட கொள்வனவு வழிகாட் டல்கள் சுற்றறிக்கையின் 6 மற்றும் 8 ஆம் இலக்க பந்தி | |
| (i) 6.2.2 | உள்ளகக் கணக்காய்வுச் சேவையினைப் பெற்றுக்கொள்வதற்கான கேள்வி சமர்ப்பிக்கப்படுவதற்கு ஆகக்குறைந்தது 21 நாட்கள் கால அளவிற்குப்பதிலாக 08 நாட்கள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) 8.9 | சபை மற்றும் உள்ளகக்கணக்காய்வுச் சேவையினை வழங்குகின்ற தனியார் கணக்காய்வுக் கம்பனிகளுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தமொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப்பிரமாணம் 134(3) | நிதிச்செயற்பாடுகள் சம்பந்தமான உள்ளகக்கணக்காய்வு அறிக்கையின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை |
| (இ) 1999 சனவரி 19 ஆந்திகதிய பீஎப்பீஈ 3ஆம் இலக்க மற்றும் நிதிப்பிரமாணம் 134(2) | உள்ளகக்கணக்காய்வு வேலைத்திட்டம் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமையதிபதியின் ஆலோசனை பெறப்பட்டிருக்கவில்லை. |

### 1.3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திறைசேரியின் அங்கீகாரமின்றி சபையினால் பின்வரும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) ஊழியர்களுக்காக வருடத்தினுள் ஒரு சம்பளப்படி நிலைக்கு மேலாக வழங்கியமை.

(ஆ) விழா முற்பணமாக ரூபா. 50,000 வரை கொடுப்பனவுகளைச் செய்திருந்தமை.

(இ) வெளிவாரி வைத்தியப் பற்றுச்சீட்டுக்களுக்காக ரூபா. 40,000 வரை மீளளிப்புச் செய்தமை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

### 2.1.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாணடிற்கான சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான நிதிசார் விளைவுகள் ரூபா.29,177,024 ஆன தேறிய பற்றாக்குறையானதுடன்,அதற்கு நோரொத்த முன்னைய ஆண்டின் தேறிய பற்றாக்குறை ரூபா 16,493,217 ஆக இருந்தமையினால் நிதிப்பெறுறேு ரூபா.12,683,808 தொகை அல்லது 76% ஆன அதிகரிப்பைக் காட்டக்கூடியதாக இருந்தது.

இப்பாதகமான நிலைமையினை ஈடு செய்வதற்காக காப்புறுதிப் பத்திர உடைமையாளர் பாதுகாப்பு நிதியத்திலிருந்து ரூபா. 30,472,838 தொகை இலாபத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. எனினும் முன்னைய ஆண்டின் காப்புறுதிப் பத்திர உடைமையாளர் பாதுகாப்பு நிதியத்திலிருந்து ரூபா. 17,126,937 தொகை மாத்திரமே மாற்றப்பட்டிருந்தது.

### 2.1.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது சபையின் மொத்த வருமானம் 14% இனால் குறைந்திருந்ததுடன் மொத்தச் செலவுகள் 8.4% இனால் அதிகரித்திருந்தது. நிதிசார் விளைவுகளின் பொழிப்பொன்று கீழே தரப்படுகின்றன.

| | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான | |
|---|---|---|
| | **2010** | **2009** |
| | ரூபா | ரூபா |
| மொத்த வருமானம் | 42,306,073 | 49,404,521 |
| மொத்தச் செலவுகள் | (71,483,097) | (65,897,738) |
| | ------------------- | ------------------- |
| வரிக்கு முன்னர் தேறிய பற்றாக்குறை | (29,177,024) | (16,493,217) |
| காப்புறுதிப் பத்திர உடமையாளர் பாதுகாப்பு நிதியிலிருந்து மாற்றங்கள் | 30,472,838 | 17,126,937 |
| வருமான வரி வரிக்குப் பின்னர் | (1,295,814) | (633,720) |
| | ------------------- | ------------------- |
| தேறிய மிகை/ பற்றாக்குறை | - | - |
| | ------------------- | ------------------- |

## 2.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சபையின் பிரதான காரியாலயம் உலக வர்த்தக நிலையக் கட்டடத்தின் 11 ஆவது மாடியில் அமைக்கப்பட்டிருந்ததுடன் இதற்கான வாடகையாக 2008 ஆம் ஆண்டின் போது ரூபா. 18,245,106 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் 2010 ஒக்தோபர் 01 தொடக்கம் 2012 செப்தெம்பர் 30 வரை ரூபா. 38,842,095 தொகையினைச் செலுத்துவதற்கான உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்தது.
கிட்டத்தட்ட 22 ஊழியர்களுக்காக 8741 சதுர அடி நில அளவிற்காக அதன் வாடகை, சேவைகள் மற்றும் வாகனத் தரிப்பிட கட்டணங்களுக்காக உரிய கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தன.
2008 நவம்பர் 17 ஆந்திகதி நடைபெற்ற பொது முயற்சிகளுக்கான கணக்குக் குழுவின் ஆலோசனையின் பிரகாரம் காரியாலய சுற்றாடலுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நில அளவைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது சபைத் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கொள்வனவு
(ஆ) உள்ளகக் கணக்காய்வு
(இ) கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தினைத் தயாரித்தல்.